அசல் வழக்கு எண்: 540/2022

DEPOSITION OF WITNESS: R.W.1

| | |
|---|---|
| பெயர் | மணி |
| தந்தை பெயர் | கோனேரி கவுண்டர் |
| வயது | 63 |
| கிராமம் | கிடாம்பாளையம் |
| வட்டம் | கலசப்பாக்கம் |
| தொழில் | விவசாயம் |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 20th day of June 2025

**முதல்விசாரணை**

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. அசல் வழக்கு 490/2022ல் நான் வாதி ஆவேன். இரு வழக்குகளும ் சேர்த்து நடத்த ஏற்கனவே உத்தரவு ஏற்ப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். 16-09-1988 தேதியில் 1-ம் பிரதிவாதி மணி என்பவர் வாதியின் தந்தை குப்பன் என்பவரிடம் பெற்ற கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 01-02-1988 தேதியில் வாதியின் தந்தை குப்பன் என்பவர் ஒரு சுப்பிரமணி மற்றும் எல்லம்மாள் என்பவரிடம் பெற்ற கிரைய பத்திரத்தின் உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 01-11-2004 தேதியில் 1-ம் பிரதிவாதி மணி என்பவர் ஒரு காளியப்பனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 20-07-1992 தேதியில் 1-ம் பிரதிவாதி மணி என்பவர் ஒரு சுப்பிரமணியன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தின் உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆகவும், சர்வே எண்.320-க்கான 1935-1936 ஆண்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான அடமானம் செய்யும் ரிசர்வு செய்யப்பட்ட நிலங்கள் என தாசில்தார் வெளியிட்ட பட்டியல் உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகவும், இவ்வழக்கின் 1-ம் பிரதிவாதி மணி மீது ஒரு காளியப்பன் என்பவர் தாக்ல் செய்த அசல் வழக்கு எண்.539/2022-ன் வழக்குறை நீதிமன்ற உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்கிறேன் ( வாதி வழக்கறிஞர் பிரதிவாதி சான்றாவணங்கள் 3,4 மற்றும் 6

ஆகியவற்றில் தான் தரப்பினர் இல்லை என ஆட்சேபணை செய்தார். அவரது ஆட்சேபணை உடன் மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன). பிராதை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>SD/- S.Senthil Babu<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |